தலைப்பு 149 – கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 149 - கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 யூன் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சுக்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம்

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு, பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/கணக்கீட்டு உத்தியோகத்தரின் (பொருத்தமான வகையில்) பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்குகள் சமர்ப்பித்தல்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், கொள்வனவுகள் என நிதி அறிக்கைகளில் ACA-**6** படிவத்தில் ரூபா.1,645,805 என காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், நிதி அல்லாத சொத்துகள் தொடர்பாக திறைசேரியின் அச்சிடப்பட்ட பிரதிகளிலும், அமைச்சின் மூலதனச் சொத்து கையகப்படுத்தல் தொடர்பான 2102, 2103 செலவுகளிலும் காட்டப்பட்ட பெறுமதி ரூபா.13,123,501 ஆக இருந்தமையால், ரூபா.11,477,696 ஆன வேறுபாடு காணப்பட்டது.	இந்த வேறுபாட்டிற்கான காரணம், இணையவழி முறைமைக்குள் தரவுகளை உள்ளிடும்போது ஏற்பட்ட பிழையாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அது சீகாஸ் (SIGAS) கணினி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதனச் சொத்து கையகப்படுத்தல்களைக் கணக்கு வைக்கும் போது செவ்வையாக்கப்படுதல் வேண்டும்.
(ii)	அமைச்சினால் செலவு செய்யப்பட்டு கட்டப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், 1996 ஆம் ஆண்டு முதல் 16 கைத்தொழில் பேட்டைகளில் கட்டப்பட்ட 13 நிர்வாகக் கட்டிடங்கள், 03 தொழிற்சாலைகள் மற்றும் 02 அலுவலக/சேவைக் குடியிருப்புக் கட்டிடங்களின் ரூபா.544.94 மில்லியன் பெறுமதி 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கணக்கு வைக்கப்படவில்லை.	கணக்கு வைக்கப்படாதிருந்த ரூபா.544.94 மில்லியன் பெறுமதி 2025 ஆம் ஆண்டுக்கு உரியதாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது.	கணக்கு வைக்கப்படாதிருந்த ரூபா.544.94 மில்லியன் பெறுமதி 2025 ஆம் ஆண்டுக்கு உரியதாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. .
(iii)	நிதி அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட ACA 6 படிவத்தில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட பயணிகள் வாகனங்களின் பெறுமதியாக குறிப்பிடப்பட்ட ரூபா.737,323,781 இற்குரிய விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை.	2023 ஆம் ஆண்டின் இறுதி இருப்புகளுடன் தொடர்புடைய தனிப்பட்ட பட்டியல் ஒன்றைச் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், இது அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல்களைச் செய்து திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். .	சொத்துகள் தொடர்பான விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். .

(iv)	மோட்டார் வாகனங்கள் தொடர்பாக சிகாஸ் (SIGAS) தகவல் முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள மொத்த பெறுமதி ரூபா.60,300,000 ஆக இருந்த ஐந்து வாகனங்கள் அமைச்சின் வாகனப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்களில் காணப்படவில்லை.	அதனுடன் தொடர்புடைய பெறுமதியை சிகாஸ் (SIGAS) தகவல் முறைமையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	சிகாஸ் (SIGAS) தகவல் முறைமையில் உள்ள தகவல்களையும், வாகனப் பிரிவில் உள்ள தகவல்களையும் இற்றைப்படுத்திப் பேணுதல் வேண்டும்.
(v)	சிகாஸ் (SIGAS) நிகழ்ச்சித்திட்டத்திலும், திறைசேரியின் அச்சிடப்பட்ட பிரதிகளிலும் அமைச்சின் வசம் மொத்தப் பெறுமதி ரூபா.5,513,319 ஆக இருந்த 35 மோட்டார் சைக்கிள்கள் காணப்பட்டபோதிலும், அமைச்சின் வாகனப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2 மோட்டார் சைக்கிள்கள் மாத்திரமே அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வந்தன.	அந்த 35 மோட்டார் சைக்கிள்களின் உரிமையானது விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் விதாதா (Vidatha) பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது. குறித்த இடமாற்றத்திற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.	சிகாஸ் (SIGAS) தகவல் முறைமையில் உள்ள தகவல்களை இற்றைப்படுத்திப் பேணுதல் வேண்டும். .
(vi)	அமைச்சிற்கு சொந்தமான 26 வாகனங்கள் சிகாஸ் (SIGAS) நிகழ்ச்சித்திட்டத்தில் சொத்துக்களாகக் கணக்கு வைக்கப்படவில்லை. .	அமைச்சிற்கு அண்மையில் இணைக்கப்பட்ட வாகனங்களை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், அவற்றைச் சொத்துக்களாகக் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அமைச்சிற்குச் சொந்தமான சொத்துக்கள் சரியாகக் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். .

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்		பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீண்டுவரும் செலவின விடயங்கள் 32, மூலதனச் செலவு விடயங்கள் 06 மற்றும் உப திட்டங்கள் 04 ஆகியவற்றின் 39 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக ரூபா.2,875,181,044 மேலதிக ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக, ஆண்டின் போது ரூபா.1,605,189,978 பயன்படுத்தப்பட்ட பின்னர், ரூபா .1,269,995,066 இன் மிகுதியானது மொத்த ஏற்பாட்டில் 20 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான சதவீத வீதத்தை எடுத்திருந்தது.	2024 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களுக்கு கைத்தொழில் அமைச்சர், பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சுகளிலும் அமைச்சராகப் பதவி வகித்ததன் காரணமாக, செலவுகள் அமைச்சுக்களிடையே பிரிக்கப்பட்டதால் செலவினம் மட்டுப்படுத்தப்பட்டதுடன், இராஜாங்க அமைச்சர்களின் பதவிக்காலம் 2024 செப்டெம்பர் மாதத்திலிருந்து நிறைவடைந்ததாலும், 2024 வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபம் இல. 1/2024 இன் அடிப்படையில் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டதாலும், வெற்றிடங்களுக்கான அரசாங்க ஆட்சேர்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டதாலும், 2024 ஆம் ஆண்டில் பொது விலை மட்டத்தில் வீழ்ச்சி ஏற்பட்டதாலும், ஓய்வூதியப் நலன்களுக்கான கோரிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டதாலும், வங்கிகள் சொத்துக்கடன்களை வழங்குவதை மட்டுப்படுத்தியதாலும் செலவு விடயங்களில் சேமிப்புகள் ஏற்பட்டன.	ஏற்பாடுகள் மீதமாகுவதைத் தவிர்த்து, திட்டமிட்டபடி ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் இருந்து அதிகபட்ச நன்மையைப் பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.
(ஆ)	மீண்டுவரும் செலவுப் பிரிவுகள் 06 மற்றும் மூலதனச் செலவுப் பிரிவுகள் 05 ஆகியவற்றில் ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டில் ஆண்டின்போது எந்தச் செலவுகளும் மேற்கொள்ளப்படாததால், மொத்த ஏற்பாடான ரூபா.202,800,000 முழுமையாக மீதமாக இருந்தது.		
(இ)	ஏதேனும் ஒரு செலவு விடயத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை என்று எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில், அதற்காக நி.பி. 66 (FR 66) ஊடாக அல்லது ஒரு மேலதிக மதிப்பீட்டின் ஊடாக ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும்போது, குறித்த செலவு விடயங்களால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள்	ஓய்வூதியப் நலன்களுக்கான கோரிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்புகள் ஏற்பட்டன.	ஏற்பாடுகளை வேறொரு செலவு விடயத்தில் இருந்து பெறும்போது, தேவைக்கு மாத்திரம் ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

தொடர்பாக கூடியளவு சரியாக ஏற்பாடுகளை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா.9,000,000 ஏற்பாடு ஒதுக்கப்பட்ட செலவு விடயத்திற்கு நி.பி. 66 ஊடாக ரூபா.2,000,000 உம் மேலதிக மதிப்பீடுகளின் ஊடாக ரூபா.3,885,000 உம் மேலதிக ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்தன. ஆனால், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் அதன் மொத்த ஏற்பாடான ரூாப.14,885,000 இலிருந்து ரூபா.10,755,490 மாத்திரமே செலவு செய்யப்பட்டு ரூபா.4,129,510 மீதமாக இருந்தது.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் பொறுப்புகள் பதிவேடு மற்றும் நிதிக் கூற்றுக்களில் (குறிப்பு iii) உள்ளடக்கப்படாத, மீளாய்வு செய்யப்பட்ட வருடத்திற்குரிய ரூபா. 4,115,868 தொகையான பொறுப்புகள் 49 சந்தர்ப்பங்களில் 2025 ஆம் வருடத்தில் செலுத்தப்பட்டிருந்தன.	சிகாஸ் (SIGAS) முறைமையில் பொறுப்புகளை கணக்கில் பதியக்கூடிய இறுதித் திகதி 2025 சனவரி 31 ஆகும். கணக்கில் பதியப்படாத பொறுப்புகளுக்குரிய வவுச்சர் இலக்கங்கள் 125 முதல் 339 வரை உள்ளவை, குறித்த திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டதால் சிகாஸ் முறைமையில் உள்ளடக்கப்பட-வில்லை. இது எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.	நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய கூற்று சரியாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	2019 ஆம் வருடத்தில் 43 சந்தர்ப்பங்களுக்கும், 2018 ஆம் வருடத்தில் ஒரு சந்தர்ப்பத்திற்கும் உரிய ரூபா. 727,693 தொகையான 43 பொறுப்புகள் இருந்தபோதிலும், குறித்த பொறுப்புகளை மீளாய்வு செய்யப்பட்ட வருடம் முடிவடைந்த பின்னரும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சிகாஸ் (SIGAS) கணினி முறைமையின் அச்சிடப்பட்ட பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் பதிவேட்டில் 2018, 2019 ஆம் வருடங்களுக்குரிய செலுத்தப்படாத பொறுப்புகள் இருப்பதாக காட்டியபோதிலும், உண்மையாக அமைச்சின் வசம் 2018, 2019 ஆம் வருடங்களுக்குரிய செலுத்தப்படாத பொறுப்புகளாக வவுச்சர்கள் இல்லை. இது தொடர்பில் அரச	**2018**, **2019** ஆம் வருடங்களுக்குரிய பொறுப்புகள் எதுவும் இல்லையென்றால், அவற்றை அகற்றுவதற்காக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர்

கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன், இதனை சிகாஸ் கணினி முறைமையிலிருந்து எதிர்காலத்தில் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	திறைசேரியுடன் (Treasury) கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

	அவதானிப்புக்கள்		பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணங்காமை**		
(அ)	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவு	அமைச்சின் கீழ் உள்ள 08 நிறுவனங்களின் 2015 – 2024 காலப்பகுதிக்குரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது	வருடாந்த அறிக்கைகள் குறித்த தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவை			
	(i) நிதி பிரமாணம் 104(03)	வெல்லவாயக் கைத்தொழில் பேட்டையில் அமைக்கப்பட்டிருந்த வேலி மற்றும் வாயிலுக்கு ஏற்பட்ட சேதத்தை மதிப்பீடு செய்வதற்காக ஆரம்ப விசாரணை நடாத்துவதற்கு 2024 நவம்பர் 20 ஆம் திகதி ஒரு விசாரணை சபை நியமிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமான 2025 மே 14 வரை விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை..	ஆரம்ப விசாரணையானது 2025 மே 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டு, நி.ஒ. 104 (3) இன் கீழ் சேதங்கள் பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன	ஒரு சம்பவத்துடன் தொடர்பான ஆரம்ப விசாரணையை உடனடியாக நடாத்தி, அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) நிதி பிரமாணம் 104 (04)	சேதம் ஏற்பட்டு 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2024 மார்ச் 21 ஆம் திகதி வாகனம் தீப்பிடித்தமை மற்றும் 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி அமைச்சின் மறுசீரமைப்புக் கிளை வெள்ளத்தில் மூழ்கியமை தொடர்பான சேதங்கள் குறித்து முழுமையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த வாகன வகையின் சில உதிரிப் பாகங்களை சந்தையில் தேடிக் கொள்வதில் உள்ள சிரமம் காரணமாக, வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்தை மதிப்பீடு செய்ய முடியாமையால் முழுமையான அறிக்கை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மறுசீரமைப்புக் கிளை வெள்ளத்தில் மூழ்கியமையால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குறித்த திருத்த வேலைகளும் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக நி.பி.இன் படி ஒரு குழுவை நியமித்து, முழுமையான அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.	சேதம் ஏற்பட்டு 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(iii) நிதி பிரமாணம் 756	மீளாய்வு செய்யப்பட்ட வருடத்திற்குரிய இருப்புக்களின் ஒப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை	இருப்புக்களின் ஒப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, 02 குழுக்களின் அறிக்கைகள் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது குறித்த அறிக்கைகள் கணக்குப் பிரிவிடம் கிடைத்து வருவதால்,	இருப்புக்களின் ஒப்பாய்வு குறித்த கால எல்லைக்குள் மேற்கொண்டு, அறிக்கைகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

			அனைத்துப் பிரிவுகளுக்கும் உரிய அறிக்கைகள் கிடைத்தவுடன் இருப் புக்களின் பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்	
	(iv) நிதி பிரமாணம் 772 மற்றும் 2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	2023 ஆம் வருடத்தில் இனங்காண ப்பட்ட, அகற்றப்பட வேண்டிய பொருட்கள் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை..	2023 ஆம் வருடத்தில் இனங்கா ணப்பட்ட, அகற்றப்பட வேண்டிய பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது..	அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட பொருட்களை, ஏற்பாடுகளின் பிரகாரம் தாமதமின்றி அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(இ)	2016 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை	அமைச்சினால் பயன்படுத்தப்படும் 03 வாகனங்களின் எரிபொருள் எரிப்புப் பரிசோதனை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்த துடன், 95 வாகனங்களின் எரிபொருள் எரிப்புப் பரிசோதனை மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	பொது நிர்வாகச் சுற்றுநிருபம் இலக்கம் 30/2016 இற்கமைய, ஏனைய வாகனங்களின் எரிபொருள் எரிப்புப் பரிசோதனையை மேற்கொள்ள தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன	சுற்றுநிருப ஏற்பாடு-களின் பிரகாரம் எரிபொருள் எரிப்புப் பரிசோதனை மேற்கொள்ளப்-படுதல் வேண்டும்.
(ஈ)	2024 சனவரி 10 ஆம் திகதியிடப்பட்ட 01/2024 இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை	பயணச் செலவுகளுக்காக ரூபா. 450,000 மேலதிக நிதி ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.	அத்தியாவசிய கைத்-தொழில் அபிவிருத்தி நடவடிக்கை-களுக்காக சேவை-யில் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களு க்கு, மேற்கொள்-ளப்பட்ட பணிகளுக்-கான கொடுப்பனவு-களை அடுத்த வருடத்திற்குக் கொண்டு செல்லாமல், குறித்த வருடத்திலேயே	செலவின விடயங்களுக்கு இடையில் நிதி ஒதுக்கீடுகளை மாற்றுவதாயின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்

			செய்வதற்காக, பிரயாணச் செலவுகளை மேற்கொள்வதற்காக ரூபா. 450,000 மட்டுமே நி.பி. 66 இன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.	
(உ)	2017 யூன் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.	சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் நாயகத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.
(ஊ)	CGIR/2019/3 ஆம் இலக்க மற்றும் 2019 யூலை 09 ஆம் திகதியிடப்பட்ட உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை	செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) தொடர்பான தகவல்-களை காலாண்டு அடிப்படையில் அறிவிக்-கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்-கவில்லை..	செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) தொடர்பான காலாண்டு அறிக்கைகள் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) தொடர்பில் உள்நாட்டு இறை-வரி ஆணையாள-ருக்கு அறிவிக்க-ப்படுதல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	200 ஏக்கர் நிலப்பரப்பில் ரய்கம தொழிற்பேட்டையை (Raigama Industrial Estate) நிறுவுவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், தொழிற்பேட்டையை ஆரம்பிக்கும் முன் சாத்தியக்கூறு ஆய்வு (feasibility study) மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள்	200 ஏக்கர் நிலப்பரப்பில் ரய்கம தொழிற்பேட்டையை அபிவிருத்தி செய்வதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட போதிலும், அதற்காக 2016 ஒக்டோபர் 26 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, சுற்றுச்சூழல் சட்டத்திற்கு (Environmental Act) அமைய, ஒரு சுற்றுச்சூழல்	முறையான சாத்தியக்-கூறு ஆய்வுக்குப் பின்னர் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பிக்கப்பட்ட தொழிற்பேட்டைத் திட்டத்தை முறையான திட்டமிடலின் பேரில் செயற்படுத்தி, அதனை

(development tasks) ஆகியவற்றைக் குறிப்பிடும் ஒரு திட்ட வரைபு (project plan) தயாரிக்கப்படவில்லை.

தொழிற்பேட்டைக்காக 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு வரை ரூபா மில்லியன் 905 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு முடிவில் எந்தவொரு முதலீட்டாளரும் (investor) தொழில்களை ஆரம்பிக்க முன்வராத காரணத்தினால், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு முடிவில் தொழிற்பேட்டையை ஆரம்பிக்க முடியாமல் போனதுடன், செய்யப்பட்ட செலவு பயனற்ற செலவாக மாறியிருந்தது.

சாத்தியக்கூறு ஆய்வு (Environmental Feasibility Study) மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

பல கட்டங்களாக நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டதால், 25 ஏக்கருக்கும் குறைவாக இருந்தமையால், சுற்றுச்சூழல் சட்டத்தின்படி சுற்றுச்சூழல் சாத்தியக்கூறு ஆய்வு (Environmental Feasibility Study) மேற்கொள்வதற்கான தேவையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் அதிகாரத்தின் (Political Authority) முடிவுகளின் அடிப்படையில், அமைச்சரவையின் அனுமதியின் கீழ் அவசரமாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமாக இந்த தொழிற்பேட்டைத் திட்டம் இருந்தமையால், அதனை ஆரம்பிப்பதற்கு முன்னர், பூர்வாங்க சாத்தியக்கூறு ஆய்வு (preliminary feasibility study) பிராந்தியப் பணிப்பாளரால் (மேற்கு மாகாணம்) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், 2019 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்துடன் இந்தத் திட்டத்தின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன், அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை, அரசியல் ஸ்திரமின்மை ஆகியவற்றின் காரணமாக திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகள் தாமதமாயின. இந்தத் திட்டத்தை மீண்டும் தொடர்வதற்குரிய அனுமதி, 2023 யூலை 27 ஆம் திகதி கைத்தொழில் அமைச்சரினால் தொழிற்பேட்டையின் பணிகள் உத்தியோகபூர்வமாக

முறையாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

		ஆரம்பிக்கப்பட்ட பின்னரே கிடைத்ததுடன், அந்தக் காரியங்கள் திட்டமிடலுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன	
(ஆ)	அமைச்சின் கீழுள்ள 10 நிறுவனங்களின் 2019-2024 காலப்பகுதிக்குரிய நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டு, உடனடியாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	எல்லா நிறுவனங்களும் குறித்த தினத்தில் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	அமைச்சின் கீழ் உள்ள, மறுசீரமைக்கப்படவுள்ள 08 நிறுவனங்களின் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.	லங்கா மினரல் சாண்ட்ஸ் லிமிடெட் (Lanka Mineral Sands Ltd.) நிறுவனமும், வரையறுக்கப்பட்ட தேசிய கடுதாசி நிறுவனமும் திட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை என்றும், கஹட்டகஹா கிரா∴பைட் லங்கா லிமிடெட் (Kahatagaha Graphite Lanka Ltd.) நிறுவனத்தின் கிரா∴பைட் இருப்புகளைக் (graphite reserves) கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் கூட்டம் பற்றிய அறிக்கைகள் கிடைக்கவில்லை என்றும், வரையறுக்கப்பட்ட லங்கா லேலண்ட் நிறுவனம் தொடர்பாக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து) ஆலோசனைகள் கிடைக்கவில்லை என்றும், வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு நிறுவனம் தொடர்பான பெறுகைகள் மேன்முறையீட்டுச் சபையின் தீர்ப்பை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள காணியைக் கையகப்படுத்தும் (acquisition) பணிகள் முதலீட்டு	உரிய 8 நிறுவனங்களின் மறுசீரமைப்புகளை (restructurinu) அங்கீகரிக்கப்பட்டவாறு மேற்கொண்டு, அவற்றின் வினைத்திறனை (efficiency) மேம்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மூடப்பட (டளைரளையவந) உள்ள நிறுவனங்கள் ,ருந்தால், அந்தக் காரியங்களை விரைவுபடுத்துவதற்குக் கவனம் செலுத்த வேண்டும்.

		ஊக்குவிப்புச் சபையினால் (Board of Investment Promotion) மேற்கொள்ளப்படுகின்றன என்றும், சி.்.இ சிமெந்து நிறுவனம் பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றைக் கூட்டி மூடப்பட (liquidate) உள்ளது என்றும், வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் (Paranthan Chemicals Limited) காஸ்டிக் சோடா / குளோரின் (Caustic Soda / Chlorine) திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட இரண்டு செலவு அறிக்கைகளிலும் செலவுகள் மாறுபடுவதற்கான காரணங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் வினவப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	கரந்தெனிய தொழிற்பேட்டையில் கறுவா பதனிடும் நிலையம் அமைத்தல், கைத்தறி துணிகள் கைத்தொழிலுக்கான மூலப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	இதற்காக 2024 ஆம் ஆண்டில், கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனையின் பேரில், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் திட்ட முன்மொழிவு மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்த போதிலும், நிதி ஒதுக்கீடு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை..	திட்டமிடப்பட்ட திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்வதற்கும், திட்டத்திற்கேற்ப நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்**டும்.**
(உ)	2023 ஆம் ஆண்டில் ரூபா 8,383,056 செலவில் வெல்லவாய தொழிற்பேட்டை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தில் இந்தக் தொழிற்பேட்டை அபிவிருத்திப் பணிகளுக்காக நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படாததால், இது தொடர்பில் எந்தவித முன்னேற்றமும் அடையப்படவில்லை.	தேசிய வரவு செலவுத் திட்டத்தின் (National Budget) மூலம் தொழிற்பேட்டைகளின் அபிவிருத்திப் பணிகளுக்காக வரையறுக்கப்பட்ட தொகையே நிதி ஒதுக்கீடாக வழங்கப்படுகின்றது. அந்த வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள், குறித்த தொழிற்பேட்டைகளில் முதலீட்டாளர்களின் கேள்விக்கு ஏற்ப, மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தின்படி பயன்படுத்தப்படுகின்றன. இதில்	தொழிற்பேட்டைகளில் உள்ள கைத்தொழில்களுக்கான முதலீட்டாளர்களின் தேவைகளை இனங்கண்டு, அதற்கேற்ப நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

		வெல்லவாய தொழிற்பேட்டையின் அபிவிருத்திப் பணிகளுக்காக 2024 ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.	

4.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தொழிற்பேட்டை அபிவிருத்தியின் கீழ் அரச காணிகளில் 281.399 ஏக்கரில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்ட 09 தொழிற்பேட்டைகளுக்காக அரசாங்கத்தினால் ரூபா மில்லியன் 1542 செலவிடப்பட்ட போதிலும், அவற்றில் எந்தவொரு கைத்தொழிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அளுத்பொல, ரய்கம, புலத்சிங்கள, கட்டுநாயக்க, நொச்சியாகம, தம்புள்ளை, சூரியவெவ ஆகிய தொழிற்பேட்டைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சகல அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அளுத்பொல, ரய்கம மற்றும் சூரியவெவ ஆகிய தொழிற்பேட்டைகளில் பெரும்பாலான அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளன. தொழிற்பேட்டைகளில் அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் நிறைவடையும் வரை முதலீட்டாளர்கள் தமது கைத்தொழில் திட்டங்களை ஆரம்பிக்கும் வாய்ப்பு இல்லை. திறய்மடு தொழிற்பேட்டையின் சகல உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 3.25 ஏக்கர் நிலப்பரப்பைத் தவிர ஏனைய நிலப் பகுதிகள் 8 முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய தொழிற்பேட்டைகளில் காணியைப் பெற்றுக்கொள்வதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து கோரிக்கைகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.	எதிர்பார்க்கப்பட்டவாறு தொழிற்பேட்டை கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்படுவதை உறுதிப்படுத்தப்படுதல் வேண்**டும்.**
(ஆ)	21 மாவட்டங்களில் தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்கும்போது ஒதுக்கப்பட்ட மொத்த காணிப்	2019 ஆம் ஆண்டில் ஆரம்பமான ஈஸ்டர் தாக்குதல், 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமை, பின்னர்	ஒதுக்கப்பட்ட காணிகளை முறையாக தொழிற்பேட்டைகளுக்காகப் பயன்படுத்த நடவடிக்கை

	பரப்பு 1,340 ஏக்கராக இருந்தபோதிலும், கைத்தொழில்களுக்காக (அதில் 741.50 ஏக்கர் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தமையால், 598.50 ஏக்கர் காணி மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு முடிவில் பயனற்று காணப்பட்டது.	சுமார் 3 வருட காலமாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகள், அமெரிக்க டொலரின் மதிப்பு அதிகரிப்பு, மின்வெட்டு மற்றும் மின்சாரக் கட்டண அதிகரிப்பு, நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்கான வெளிநாட்டுச் சந்தைச் சுருக்கம் போன்ற காரணங்களினால் தொழிற்சாலைகளில் உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியாமை, பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வெளிநாட்டு வேலைகளுக்குச் செல்வது போன்ற காரணங்களால், தமது உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதில் சகல மாகாணங்களிலும் உள்ள கைத்தொழிலாளர்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதன் காரணமாக, அமைச்சு எதிர்பார்த்த மட்டத்தில் கைத்தொழில்களின் பணிகள் இடம்பெறவில்லை.	எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	2017 ஆம் ஆண்டில் களுத்துறை ரய்கம கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி வலயத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட மத்திய பொறியியல் சேவை (தனியார்) நிறுவனம், உரிய காணியில் காணப்படும் இறப்பர் மரங்களை அகற்றாமை, தோட்ட நிறுவனங்களின் எதிர்ப்புக்கள் மற்றும் நீர்வழங்கல் கட்டமைப்பை முழுமையாக நிறைவு செய்யாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில், 2025 ஏப்ரல் மாதத்தில் கூட ஒப்பந்தத்தின்படி ஒப்பந்தப் பணியை நிறைவு	பிரதேச செயலாளரின் அனுமதியுடன் அபிவிருத்திக்குத் தடையாக இருந்த பலா மரங்களை வெட்டி அகற்றிய பின்னர், உள்ளக வீதி அபிவிருத்திப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிற்பேட்டையின் பாதுகாப்பு வேலி அமைப்பதற்கு தடையாக இருக்கும் இறப்பர் மரங்களை அகற்றுவது தொடர்பாக, தோட்ட நிறுவனம் மற்றும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலர்களுடன் 2025 பெப்ரவரி 17 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. தோட்ட நிறுவனம் மில்லனிய தொழிற்பேட்டையின் காணி தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளதால், அகற்றப்பட வேண்டிய இறப்பர்	பணிகளை விரைவாக நிறைவு செய்வதற்கு இருக்கும் தடைகள் குறித்து தீவிர கவனம் செலுத்தி, பணியை நிறைவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் திட்டமிட்டவாறு மேற்கொள்ளுதல் வேண்டும்.

	செய்யவில்லை.	மரங்கள் பெறுமதிக்கான மதிப்பீட்டு அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அந்த மரங்களை ஏலத்தில் விற்று உரிய பணத்தை நீதிமன்றத்தில் வைப்பிலிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், அணுகல் வீதியை அமைப்பதற்கு 80 பேர்ச்சஸ் காணி கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன், அதன் அளவீட்டுப் பணிகள் நில அளவையாளர் திணைக்களத்தில் நிலவிய தொழில் நடவடிக்கை காரணமாக தாமதமானதால், உரிய காணியைக் கையகப்படுத்தும் பணிகளும் தாமதமாயின. இந்தத் தாமதம் காரணமாக, நீர்வழங்கல் கட்டமைப்புக்கான அணுகல் வீதியினூடாக நீர்க்குழாய்களை இடும் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்க முடியவில்லை.	
(ஈ)	தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்கும்போது, திட்ட முன்மொழிவுகளின்படி 24 தொழிற்பேட்டைகளில் எதிர்பார்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 32,588 ஆக இருந்தபோதிலும், உண்மையில் சேவையில் ஈடுபடும் ஊழியர்களின் எண்ணிக்கை 15,949 ஆக, அதாவது 51 சதவீதம் குறைந்த மட்டத்தில் இருந்தமையினால், எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைதல் குறைந்த மட்டத்தில் இருந்தது.	கடந்த சில வருடங்களாக நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை, நாட்டின் பொருளாதார நெருக்கடி, எரிபொருள் பற்றாக்குறை, மூலப்பொருட்களை நாட்டிற்கு இறக்குமதி செய்ய முடியாமை, கட்டுமானத் துறையின் பின்னடைவு, உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்ய முடியாமை, மின்சாரக் கட்டண அதிகரிப்பு, தொழிலாளர்கள் வேறு நாடுகளுக்குக் குடிபெயர்தல் போன்ற காரணங்களினால் பல கைத்தொழில்களால் தமது உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லவும், அதிகபட்ச கொள்ளளவுடன் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியாமல் போயுள்ளது. இவ்வாறானதொரு சூழ்நிலையில், கைத்தொழில்களை நடாத்துவதற்கு செலவைக் குறைக்கவும், பல நிறுவனங்களுக்கு சுழற்சி முறைமையிலும், குறைந்த	இலக்குகளை அடைவதற்குப் போதுமான மனிதவளத்தை பேணுதல் வேண்டும்.

ஊழியர்களைப் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியும் ஏற்பட்டுள்ளது.

4.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	கரந்தெனிய தொழிற்பேட்டையின் அணுகல் வீதிகளை திருத்துவதற்காக ரூபா மில்லியன் 65.98 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அதன் பௌதீக முன்னேற்றம் 0 சதவீதமாக இருந்தது. கட்டுநாயக்க தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்காக ரூபா மில்லியன் 4.1 மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பௌதீக முன்னேற்றம் 2 சதவீதம் என்ற குறைந்த மட்டத்தில் இருந்ததுடன், எந்தவொரு நிதியும் செலவிடப்பட்டிருக்கவில்லை.	இடைக்கால காலவெல்லையைக் கொண்ட இந்த அபிவிருத்திப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் நிதியாண்டின் முடிவில் விடுவிக்கப்பட்டதன் அடிப்படையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அதற்கான பெறுகைப் பணிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டுநாயக்க தொழிற்பேட்டைக்குரிய ஆரம்ப சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ரூபா 150,000/- பணம் செலுத்தப்பட்டு, அந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணிக்காக பெறுகைப் பிரிவினால் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது. ஆரம்ப சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கையைத் தயாரிப்பதற்காக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு, 40 சதவீதத்திலான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கை இதுவரை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	கட்டுநாயக்க திட்டத்தின் ஆரம்ப சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கை விரைவாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். கரந்தெனிய திட்டத்தின் பணிகளை விரைவாக நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியிலான முன்னேற்ற அறிக்கைகளைச் பரிசோதித்த போது, ரூபா மில்லியன் 772 மதிப்பிடப்பட்ட 07 திட்டங்களின் பௌதீக	பதில்கள் வழங்கப்படவில்லை..	திட்டங்களைத் திட்டமிடும் போது நடைமுறையில் உள்ள யதார்த்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் வேண்டும் என்பதுடன்,

முன்னேற்றம் 10% - 25% இற்கு இடையிலும், ரூபா மில்லியன் 185.59 மதிப்பிடப்பட்ட 21 திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 25% - 50% இற்கு இடையிலும், ரூபா மில்லியன் 109.08 மதிப்பிடப்பட்ட 17 திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 50% - 75% இற்கு இடையிலும், ரூபா மில்லியன் 342.15 மதிப்பிடப்பட்ட 35 திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 75% - 99% இற்கு இடையிலும் காணப்பட்டதுடன், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் இந்தத் திட்டங்களை நிறைவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.		திட்டமிட்டவாறு பணிகளை நிறைவு செய்யதல் வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2023 ஆம் ஆண்டில் அகற்றுவதற்காக அடையாளம் காணப்பட்ட 08 வாகனங்களில் ஒரு வாகனம் மாத்திரமே ஏலத்தில் விற்கப்பட்டதுடன், 03 வாகனங்கள் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 04 வாகனங்கள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை அகற்றப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2023 ஆம் ஆண்டில் ஏலத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட 08 வாகனங்கள் 2024 ஆம் ஆண்டில் ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், ஒரு வாகனம் மாத்திரமே ஏலத்தில் விற்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஏலத்தில் விற்கப்படாத 03 வாகனங்கள் பாவனைக்கு உதவாத பொருட்களாக கைத்தொழில் அபிவிருத்திச் சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய வாகனங்களை மீண்டும் இந்த ஆண்டில் ஏலத்தில் விற்பனை செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	அகற்றப்பட வேண்டிய வாகனங்கள் ஒழுங்குவிதிகளின்படி விரைவாக அகற்றப்படுதல் வேண்டும்.

(ஆ)	அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட வாகனங்களைத் தவிர, 06 வாகனங்கள் பழுதுபார்ப்பு இன்றி அமைச்சின் வளாகத்திலும் பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்ட நிறுவனங்களிலும் நிறுத்தப்பட்டிருந்தன.	அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட வாகனங்களுக்கு மேலதிகமாக, அமைச்சில் நிறுத்தப்பட்டுள்ள 02 வாகனங்கள் திடீர் விபத்துக்களுக்கு உள்ளானமையால், அவை வழக்கு நடவடிக்கைகள் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வரும் வாகனங்கள் ஆகும். 04 வாகனங்கள் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக வாகனப் பழுதுபார்க்கும் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன, மேலும் இந்த வாகனங்களின் பழுதுபார்ப்புக்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	பழுதுபார்க்கப்பட வேண்டிய வாகனங்களை விரைவாகப் பழுதுபார்த்து, ஓடுவதற்கு பயன்படுத்தல் வேண்டும்
(இ)	ரூபா 52,200,000 மொத்தப் பெறுமதியுடைய 12 வாகனங்களின் உரிமை கையகப்படுத்தப்படாமல் இருந்தபோதிலும், அவை சொத்துக்களாக கணக்கில் பதியப்பட்டிருந்தன.	அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்படாத வாகனங்களின் உரிமையைக் கையகப்படுத்துவதற்கான அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	வாகனங்களின் உரிமை கையகப்படுத்தப்படுதல் வேண்டும்.
(ஈ)	சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் வாகனங்கள் தொடர்பான தகவல்களில், ரூபா 79,848,262 மொத்தப் பெறுமதியுடைய 8 வாகனங்களின் வாகன இலக்கங்கள் குறிப்பிடப்படாமல் இருந்தன.	சமீப காலத்தில் இணைக்கப்பட்ட வாகனங்களை அமைச்சுக்குக் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்த பின்னர், சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் சொத்துக்களாகக் கணக்கில் பதிய நடவடிக்கை எடுக்கப்படும்.	அமைச்சின் சொத்து ஆவணங்களில் உள்ள தகவல்களுடன் ஒப்பிடப்படுதல் வேண்டும். வேறுபாடுகள் இருந்தால், தாமதமின்றி திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.5 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவையில் 880 இன் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய அலுவலர்கள் அரசாங்க அலுவலர்களின் பிணைக்கட்டளைச்	அரசாங்க அலுவலர்களின் பிணைக்கட்டளைச் சட்டத்திற்கு அமையப் பிணைவைக்க வேண்டிய அலுவலர்களை இனங்காணுதல் தொடர்பாக அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அந்தப் பணிகளை விரைவாக நிறைவு	பிணைவைக்க வேண்டிய அலுவலர்களிடமிருந்து பிணையைப் (security) பெற்றுக்கொள்ள நடவடிக்கை

சட்டத்திற்கு (Security Ordinance for Government Officers) இணங்க பிணை வைக்க வேண்டியிருந்த போதிலும், அமைச்சின் அலுவலர்கள் அவ்வாறு செய்யவில்லை.	செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	எடுக்கப்படுதல் வேண்டும்.

4.6 நட்டங்களும் சேதங்களும்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், நிதி அறிக்கைகளில் உள்ள நட்டங்கள் மற்றும் பதிவழிப்பு பற்றிய கூற்றில், நிதி பிரமணாம் 106 மற்றும் நிதி பிரமாணம் 113 இன் கீழ் ஏற்பட்ட நட்டங்கள், நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகள் பற்றிய கூற்றின் கீழ், அந்த ஆண்டில் நட்டத்தை மீட்டெடுத்தல்/ பதிவழிப்பு செய்தல் என்ற கூற்றின் கீழ், ரூபா.25,000 இற்கு மேற்பட்ட 11 சம்பவங்களுக்காக ரூபா.28,700,797 எனக் குறிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகள் தொடர்பாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அந்த நிலுவை 13 சம்பவங்களுக்காக ரூபா.29,267,359 ஆக இருந்தது. இதனால் ரூபா.566,561 வித்தியாசம் காணப்பட்டது. நட்டத்தின் தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்துதலில், வாகனச் சம்பவங்கள் 10 மற்றும் ஏனைய சம்பவங்கள் 03 என முறையே ரூபா.28,219,497 மற்றும் ரூபா.520,000 எனக்	சம்பந்தப்பட்ட தகவல்கள் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்ட பின்னரே பெறப்பட்டதால், அவற்றை நிதி அறிக்கைகளில் உள்ளடக்க முடியவில்லை.	நிதி அறிக்கைகளில் சரியான தகவல்களை உள்ளடக்கவும் அவற்றை உறுதிப்படுத்தவும் தேவையான தகவல்களைச் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

	காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உண்மையான வாகனச் சம்பவங்கள் 11 மற்றும் ஏனைய சம்பவங்கள் 04 என்று முறையே ரூபா.28,619,559 மற்றும் ரூபா.686,500 ஆக இருந்தது. இதனால் அந்த நிலுவைகளில் முறையே ரூபா.400,062 மற்றும் ரூபா.166,500 வித்தியாசம் ஏற்பட்டது.		
(ஆ)	மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், நிதி அறிக்கைகளில் உள்ள நட்டங்கள் மற்றும் பதிவழிப்பு பற்றிய கூற்றில், நிதி பிரமணாம் 106 மற்றும் நிதி பிரமாணம் 113 இன் கீழ் ஏற்பட்ட நட்டங்கள், நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகள் பற்றிய கூற்றின் கீழ், அந்த ஆண்டில் நட்டத்தை மீட்டெடுத்தல் அல்லது பதிவழிப்பு செய்தல் என்ற கூற்றின் கீழ், ரூபா.25,000 இற்கு மேற்பட்ட மேற்பட்ட 02 சம்பவங்களுக்காக ரூபா.107,574 எனக் குறிக்கப்பட்டிருந்தது. ஆனால், நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகள் தொடர்பாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அந்த நிலுவை 04 சம்பவங்களுக்காக ரூபா.377,557 ஆக இருந்ததால் ரூபா.269,978 வித்தியாசம் காணப்பட்டது. நட்டத்தின் தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்துதலில், வாகனச் சம்பவங்கள் 02 இற்காக ரூபா.107,574 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி அது வாகனச் சம்பவங்கள் 03 மற்றும் ஏனைய சம்பவங்கள்	பதில்கள் வழங்கப்படவில்லை	நிதி அறிக்கைகளில் சரியான தகவல்களை உள்ளடக்கவும், அவற்றை உறுதிப்படுத்தவும் தேவையான தகவல்களைச் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

01 என முறையே ரூபா.211,052 மற்றும் ரூபா.166,500ஆக இருந்ததால் , அந்த நிலுவை-களுக்கு இடையில் ரூபா.269,978 வித்தியாசம் காணப்பட்டது.

4.7 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரைகள்**
(அ)	அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் இறந்த மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து மீளப் பெற வேண்டிய ரூபா.193,787 நிலுவையும், ஓய்வுபெற்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து மீளப் பெற வேண்டிய ரூபா.101,386 நிலுவையும், சேவையை விட்டு விலகிய ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து மீளப் பெற வேண்டிய ரூபா.364,817 நிலுவையும் 3 வருடங்களுக்கும் மேலாக இருந்து வந்ததோடு, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு முடிவில் கூட அவை தீர்க்கப்படாமல் நிலுவையில் இருந்தன.	இந்தக் கடன் நிலுவைகள் “விதாத்தா பிரிவு'' அலுவலர்களிடமிருந்து மீளப் பெற வேண்டிய கடனாகும். 2024 நவம்பர் 25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2412/08 மூலம், இந்த அமைச்சின் கீழ் இருந்த விதாத்தா பிரிவு 2025 சனவரி 01 ஆம் திகதி முதல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலதிக நடவடிக்கைகளுக்காக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மீளப் பெறப்படாத கடன் நிலுவைகளை, சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்..
(ஆ)	2024 மார்ச் 21 ஆம் திகதி தீ விபத்துக்குள்ளான மோட்டார் வண்டிக்கு, முகவர் நிறுவனம் ரூபா.602,809 இற்கு மதிப்பீட்டைச் சமர்ப்பித்திருந்தது. ஆயினும், கணக்காய்வு தினமான 2025 மே 14 ஆம் திகதி வரை, இந்த இழப்பிற்கான காப்புறுதி இழப்பீட்டைப் பெறுவதற்கோ திருத்தும் பணிகளை மேற்கொள்வதற்கோ எந்த நடவடிக்கையும்	சம்பந்தப்பட்ட வாகனம் 2024 மார்ச் 21 ஆம் திகதி திடீர் தீ விபத்துக்குள்ளானதால், பழுதுபார்ப்பதற்காக மதிப்பீட்டைப் பெறுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த வாகன வகையின் சில உதிரிப் பாகங்களை சந்தையில் தேடிக் கண்டறிவதில் உள்ள சிரமம் காரணமாக, காப்புறுதி நிறுவனத்திடம்	காப்புறுதி இழப்பீட்டைப் பெறுவதையும் வாகனப் பழுதுபார்ப்பையும் உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

	எடுக்கப்படவில்லை.	சமர்ப்பிப்பதற்காக ஒவ்வொரு பொருளின் விலைப்பட்டியலையும் சேர்த்து மதிப்பீடு ஒன்றைச் சமர்ப்பிக்க முடியவில்லை. வாகனத்தின் இழப்பை மதிப்பிட முடியாமல் போனதால் பழுதுபார்க்கும் பணிகள் தாமதமாகின. வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்ட நிறுவனம் மற்றும் காப்புறுதி நிறுவனத்துடன் கலந்துரையாடி, இந்த வாகனத்தைப் பழுதுபார்ப்பது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன	
(இ)	அமைச்சுக் கட்டிடத்திற்கு அருகிலுள்ள வீதியை புனரமைத்தபோது, கட்டுமான நிறுவனத்தின் தவறுகள் காரணமாக 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி அமைச்சின் வடிகால் அமைப்பு தடைப்பட்டு, அமைச்சின் மறுசீரமைப்புப் பிரிவு வெள்ளத்தில் மூழ்கியது. இதனால் ஏற்பட்ட நட்டம் ரூபா.821,286 என்று உதவிப் பணிப்பாளர் (பொறியியல்) மூலம் மதிப்பிடப்பட்டிருந்தது. இந்த நட்டத்தைச் செலுத்த வீதி கட்டுமான நிறுவனம் ஒப்புக்கொண்டிருந்த போதிலும், கணக்காய்வு தினமான 2025 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையிலும் அது மீளப்பெறப்படவில்லை, மேலும் நிதி அறிக்கையில் இது பற்றிய வெளிப்படுத்தலும் செய்யப்படவில்லை.	அமைச்சின் மறுசீரமைப்புப் பிரிவு வெள்ளத்தில் மூழ்கியதால் ஏற்பட்ட நட்டத்தை மதிப்பிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக, நிதி பிரமணாம் படி ஒரு குழுவை நியமித்து, முழுமையான அறிக்கையை விரைவாக தயாரிக்கும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன.	நட்டத்தை மீளப் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	புத்தல கைத்தொழில் பேட்டை நிறுவப்பட்டு 18 வருடங்கள் ஆகியும் எந்தவொரு கைத்தொழிலாளியும் குத்தகைக் கையொப்பங்களை இடவில்லை. அத்தோடு, ஒரு கைத்தொழிலாளர் மாத்திரம் நகர	2024 திசெம்பர் 30 ஆம் திகதியிடப்பட்ட, அப/24/2210/814/011 இலக்கம் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள்	குத்தகைக் கையொப்பங்களை முறைப்படி இட்டு, குத்தகை நிலுவைத் தொகைகளை மீளப் பெறுவதற்கான முறையான செயல்முறையை

	அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா.1,068,000 ஆன குத்தகை தொகை செலுத்திருந்தார்.	மேற்கொள்ளப்படும்.	தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(உ)	ரயிகம தொழிற்பேட்டையில் ரூபா.87.96 மில்லியன் செலவில் நிர்வாகக் கட்டிடம் ஒன்றும், புத்தல தொழிற்பேட்டையில் ரூபா.3.585 மில்லியன் செலவில் உத்தியோகத்தர் குடியிருப்பு ஒன்றும் கட்டப்பட்டிருந்த போதிலும், அவை பாவனையின்றி மற்றும் முறையாகப் பராமரிப்பின்றி காணப்பட்டதால், அந்தக் கட்டிடங்களுக்காகச் செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவாக மாறியிருந்தது.	ரயிகம கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப உயர் வலயத்தில் சுமார் 29,000 சதுர அடி பரப்பளவைக் கொண்ட நிர்வாகக் கட்டிடத்தின் இடவசதியை, தொழிற்பேட்டையில் புதிய கைத்தொழில் திட்டங்களைத் தொடங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில முதலீட்டாளர்கள் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் செய்துள்ளனர். அதன் மதிப்பீட்டு பெறுமதி பெறப்பட்டு, மேலதிக நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	கட்டிடங்களை முறையாகப் பராமரித்து, பயன்பாட்டுக்கு எடுக்கப்படுதல் வேண்டும்.
		புத்தல தொழிற்பேட்டையில் உள்ள ஊழியர் குடியிருப்பானது, கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன், அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு வழங்குவதற்காக தொழிற்பேட்டையின் முதலீட்டாளர் சங்க உறுப்பினர்களிடம் வினவப்பட்டுள்ளது. இருப்பினும், இதுவரை திருப்திகரமான பதில் கிடைக்கப்பெறவில்லை.	
(ஊ)	புத்தல தொழிற்பேட்டையில் காட்போர்ட் அட்டைப் பெட்டிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் கைத்தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்காக 01 ஏக்கர் 05 பேர்ச்சஸ் காணிப்பகுதி ஒரு கைத்தொழில் மேற்கொள்பவருக்கு	இந்த முதலீட்டாளர், ஆரம்பத்தில் காட்போர்ட் அட்டைப் பெட்டிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் பணிகளுக்காக சமர்ப்பித்த விண்ணப்பத்தின்படி, இந்தக் கைத்தொழில் பேட்டையை ஆரம்பிப்பதற்கு	தொழிற்பேட்டைகளில் மேற்கொள்ளப்படும் தொழில்கள் தொடர்பில் ஒரு பின் தொடர் பொறிமுறையை நிறுவுதல் வேண்டும். மேலும், அனுமதிக்கப்பட்ட தொழில்களுக்கு முரணான

	வழங்கப்பட்டிருந்தது. ஆனால், குறித்த முதலீட்டாளர் சமர்ப்பித்திருந்த வியாபார அமைப்பிற்கு முரணான வகையில், அவர் தேங்காய்ச் மட்டைகள் சார்ந்த ஒரு தொழிலை நடாத்தி வந்ததுடன், அதற்கான உரிய அனுமதிகளும் அவரிடம் இருக்கவில்லை, மேலும் ஒதுக்கப்பட்ட காணிப்பகுதி குறைந்த பயன்பாட்டுடன் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது.	அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டு, காணியை ஒதுக்கீடு செய்த கடிதமும் 2018 பெப்ரவரி 18 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், குறித்த முதலீட்டாளர் பின்னர் சமர்ப்பித்த வேண்டுகோள் ஒன்றின் மூலம், மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதில் உள்ள பிரச்சினைகள் காரணமாக இந்தக் கைத்தொழிலை தேங்காய் மட்டைகள் சார்ந்த உற்பத்தித் தொழிற்சாலையாக மாற்றித் தருமாறு 2020 நவம்பர் 20 ஆம் திகதி எழுத்து மூலம் கோரியுள்ளார். அதற்கான குறித்த திட்ட அறிக்கை மற்றும் விண்ணப்பப் படிவத்தையும் அவர் சமர்ப்பித்துள்ளார். எனினும், இந்தக் கோரிக்கையானது பிரதேச கைத்தொழில் சேவைக் குழுவின் அனுமதியைப் பெற்றுள்ளதா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்பதால், இது அடுத்த குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, உரிய திருத்தத்தைச் செய்வதற்கு மற்றும் பரிந்துரையைப் பெற்று அமைச்சின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், குறைந்தளவு உபயோகப்படுத்தப்பட்ட காணிப்பகுதியை பயன்படுத்தாவிட்டால், அந்தக் காணிப்பகுதியை இரத்து செய்து வேறு முதலீட்டாளருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கைத்தொழிலாளருக்கு அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வேறு தொழில்களை நடாத்துபவர்கள் இருந்தால், அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான பொறிமுறையை வகுத்து, உரிய அனுமதியின் கீழ் அதனைச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்படுதல் வேண்டும்.
(எ)	உள்நாட்டு செம்மண் ஓடுகள் உற்பத்திக்கு இலங்கைத் தரச்	மிகுதியாக உள்ள பணத்தை அமைச்சுக்கு அனுப்புமாறு	அதிகமாக செலுத்தப்பட்ட தொகையைத் தரச்

	சான்றிதழைப் பெறுவதற்கு தேவையான நிதியுதவியை வழங்குவதற்கான ஒரு திட்டமாக, 2016 ஆம் ஆண்டில் இலங்கை தர நிருணய நிறுவனத்திற்கு ரூபா.4,298,224 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் உண்மையான செலவு ரூபா.3,032,462 ஆக இருந்தது. இதன்படி, அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா.1,265,762 தொகையை பொருத்தமான தொழிற்சாலைகளைத் தேர்ந்தெடுத்து தரச் சான்றிதழைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் என்று கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு வரை இந்த அலுவல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பணி நிறைவு செய்யப்படவில்லை.	இலங்கைத் தர நிருணய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	சான்றிதழைப் பெறும் பணிக்குப் பயன்படுத்த வேண்டும். அல்லது, அவ்வாறு செய்ய முடியாவிட்டால், அதனை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஏ)	கைத்தொழிலாளர்களுக்கு காணி ஒதுக்கீடு செய்யும் போது வழங்கப்படும் காணி ஒதுக்கீட்டுக் கடிதத்தின்படி, காணி ஒதுக்கப்பட்டதன் பின்னர் 35 வருட நீண்டகால குத்தகை ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்படல் வேண்டும். இருப்பினும், 30 தொழிற்பேட்டைகளில் உள்ள 347 கைத்தொழிலாளர்களுக்கு குத்தகை ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்படவில்லை.	தொழிற்பேட்டைகளிலிருந்து காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள, ஆனால் இதுவரை குத்தகை ஒப்பந்தம் தயாரிக்கப்படாத முதலீட்டாளர்களின் குத்தகை ஒப்பந்தத்தை உடனடியாகத் தயாரித்து வழங்குவதற்காக, அமைச்சினால் தொழிற்பேட்டை மட்டத்தில் நடமாடும் சேவைகள் நடாத்துவது 2021 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது வரை நடைமுறைப்படுத்தப்படுகிறது.	காணி ஒதுக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு கூடவே, குத்தகை ஒப்பந்தங்களிலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.
(ஐ)	பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் வலயங்களை நிறுவுவதற்கான திட்டத்தின் கீழ், கிராந்துருகோட்டை, திம்புலாகலை, திக்வெல்ல மற்றும் திருகோணமலை கட்டம் III ஆகிய 4 தொழிற்பேட்டைகளில் காணி அளவீடு செய்தல், நிலத்தைத் துப்பரவு செய்தல்	இந்த 04 புதிய தொழிற்பேட்டைகளும் 2022 ஆம் ஆண்டின் தேசிய வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் மூலம் அறிவிக்கப்பட்ட, ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் ஒரு தொழிற்பேட்டையை நிறுவும் விசேட தேசிய வேலைத்திட்டத்தின் கீழ்	தொழிற்பேட்டைகளுக்காக செலவு செய்வதற்கு முன்னர், அதன் தேவையைக் குறித்து மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

மற்றும் காணித் துண்டுகளைப் பிரிப்பதற்கான திட்டத்தைத் தயாரித்தல் போன்ற பணிகளுக்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா.3,266,558 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அந்த பணிகளை இடைநிறுத்தப்பட்டதால், அதற்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவாக மாறியிருந்தது.

ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களாகும். 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அதற்காக ரூபா.5000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் ஆரம்பத்தில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் ஸ்திரமின்மை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஒதுக்கப்பட்ட பணம் நடைமுறையில் கிடைக்கப்பெறவில்லை. மேலும், அபிவிருத்திப் பணிகளுக்காக அரசாங்கத்தினால் நிதி விடுவிப்பது கடுமையான மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, விடுவிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி, அதுவரை அபிவிருத்திப் பணிகளின் பெரும்பகுதியை நிறைவு செய்துள்ள தொழிற்பேட்டைகளின் பணிகளை மாத்திரம் முழுமையாக முடிப்பதற்கு அமைச்சு எடுத்த முடிவினால், இந்த 04 தொழிற்பேட்டைகளின் அபிவிருத்திப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த துறைக்கு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதியின் அளவு மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் எதிர்காலத்தில் இந்த 04 தொழிற்பேட்டைகளின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

5. நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்		பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	உள்ளக கணக்காய்வு திட்டத்தின்படி அந்தப் பிரிவால் 2024 ஆம் ஆண்டிற்கு 13 கணக்காய்வு வினவல்களை (Audit Queries) வெளியிடுவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், வெளியிடப்பட்ட வினவல்களின் எண்ணிக்கை 02 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது	2024 ஆம் ஆண்டிற்காக அமைச்சுக்காக 02 கணக்காய்வு வினவல்கள் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, பொது தொழில்முயற்சிகளுக்கான தெரிவுக்குழு (COPE) மற்றும் அரச பொது முயற்சிகள் திணைக்களம் ஆகியவற்றின் கோரிக்கையின் பேரில், அமைச்சின் கீழுள்ள நியதிச் சட்ட நிறுவனங்கள் தொடர்பில் உள்ளக கணக்காய்வு திட்டத்திற்குப் புறம்பாக 11 விசேட கணக்காய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த விசேட விசாரணைக் கடமைகளுக்காக அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டதால், எதிர்பார்க்கப்பட்ட வகையில் அமைச்சுக்கான உள்ளக கணக்காய்வு வினவல்களைச் சமர்ப்பிக்க முடியவில்லை. அத்துடன், 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் நடைபெற்றதன் காரணமாக, அதற்காக அலுவலர்கள் விடுவிக்கப்பட்டதால், கணக்காய்வு திட்டத்தின்படி அமைச்சுக்குள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கணக்கயா்வு வினவல்களின் அளவைச் செய்ய முடியவில்லை.	திட்டமிட்டபடி உள்ளக கணக்காய்வு மேற்கொள்ள முடியாவிட்டால், தமது பிரிவின் கீழுள்ள நிறுவனங்களின் உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகளை முறையாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

6. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு முடிவில் மொத்தம் 233 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றில், சிரேஷ்ட மட்டத்தில் 21 வெற்றிடங்களும், மூன்றாம் நிலை மட்டத்தில் 02 வெற்றிடங்களும், இரண்டாம் நிலை மட்டத்தில் 184 வெற்றிடங்களும், ஆரம்ப மட்டத்தில் 26 வெற்றிடங்களும் இருந்தன.	அரச சேவையில் புதிய ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், 2025 சனவரி மாதம் நிலவும் உண்மையான பதவியணி எண்ணிக்கை தொகைக்கு அமைவாகவே இணைக்கப்பட்ட பதவியணி தொகை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள வெற்றிடங்கள் தொடர்பாக பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	அத்தியாவசிய பதவிகளில் உள்ள வெற்றிடங்களை விரைவாக நிரப்புதல் வேண்டும்